திரு. ரா. ராமச்சந்திர துரை: தலைவர் அவர்களே, ஆசிரியர் பள்ளிகளில் கூட இந்த அங்கஹீனர்கள் வேலையில்லாமல் ஒதுக்கப்படுகிறார்கள். போர்க்களத்தில் சென்று கால் இழந்தவர்கள் கூட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அவர்கள் மனுக்கொடுத்து, வேலையில்லாமல் அவர்களைத் தள்ளிவிடுகிறார்கள். ஆசிரியர் பதவியை அங்கஹீனர்களுக்குக் கொடுப்பதில் தெர்ந்தரவு இல்லை. எனவே ஆசிரியர் பதவிகளை அங்கஹீனர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதுபற்றிய உத்திரவு கல்வித்துறையிலே நீண்ட நாட்களுக்கு முன்னமேயே இருக்கிறது. இப்பொழுது மட்டும் இல்லை. அங்கஹீனமுற்றவர்கள் பள்ளிகளுக்குச் சென்றால், மாணவர்களிடையே ஒரு எண்ணத் தாழ்வு ஏற்படும். ஆகவே, அவர்கள் சரியாகப் பயிற்சி கொடுக்க முடியாது என்ற கருத்திலேதான் அந்த உத்தரவு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவிலேயே அதிகாரிகள் இப்படிப்பட்ட அங்கஹீனர்களுக்கு ஆசிரியர் பயிற்சி கொடுக்கமுடியும், ஆசிரியர் வேலையை சரியாகச் செய்ய முடியும் என்று கருதுவார்களேயானால் அதற்கு விதிவிலக்கு கொடுப்பதற்கும் அந்த உத்தரவிலேயே வகை செய்யப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் கல்வித்துறையில் கேட்கவேண்டும்.

திரு. எஸ். முருகையன்: அங்கஹீனர்கள் அரசாங்க அலுவலகங்களில் தட்டெழுத்தாளர் வேலைக்காக நேர்முகத் தேர்வுக்கு வந்தால், நல்லவர்களும் வருகிறார்கள், அங்கஹீனர்களும் வருகிறார்கள். முதலில் அங்கஹீனர்களுக்கு சலுகை கொடுத்து அவர்களுக்குத் தட்டெழுத்தாளர் போன்ற வேலைகளைக் கொடுப்பதற்கான ஒரு உத்தரவை உடனடியாகப் பிறப்பிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசாங்க நிறுவனங்களிலே வேலைக்கு எடுக்கும்பொழுது இப்படிப்பட்ட அங்கஹீனர்களையும் நம்முடைய வேலை தேடித்தரும் ஸ்தாபனம் அனுப்புகிறது. அவர்கள் வேலைக்குப் பொருத்தமாக இருந்தால் வேலை கொடுக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்திவருகிறோம். நான் முன்னால் குறிப்பிட்டபடி அரசாங்க நிறுவனங்களில் இப்படிப்பட்டவர்களுக்கு வேலை கொடுத்து, வேலை கொடுக்கிறோம் என்பதற்காகப் பரிசுகளும் பெற்றிருக்கிறார்கள்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, உடல் உறுப்புகள் ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சி தருகிற தனியார் பள்ளிகளுக்கு உதவுகின்ற வகையில் அரசு ஏதாவது சிறப்புத் திட்டம் திட்டுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிப்பட்ட உதவியும் இப்பொழுது செய்யப்படுகிறது. எந்த அளவுக்கு உதவி செய்யப்படுகிறது என்ற விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

Ground water project

*597 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) Whether the Hon. the Minister held discussion with the U.N. Mission on matters relating to the second phase of the U.N. Ground Water Project; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) பேரவைமுன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

*320—323ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1970 மார்ச் 20]

திரு. வ. ஜார்ஜ் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நமது அசெம்பளித் துறை விதிப்படி கேள்விகளுக்கு அமைச்சர் அவர்கள பதில் அளிக்க வேண்டும். அரசாங்கத்தின் கூட்டுச் செயலாளர் கையொப்பமிட்டு இந்த அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்தத் துறைச் செயலாளர்? தவறு என்ன ?

திரு. வ. ஜார்ஜ் : துறை தெரியாது. அரசாங்க கூட்டுச் செயலாளர் அப்துல் ரஸாக் என்று இருக்கிறது. அமைச்சர் பெயரில் இருக்க வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்தான் கொடுத்திருக்கிறார் விவர அறிக்கையை. அமைச்சர்தான் அவையிலே பதில் சொல்கிறார். செயலாளர் வந்து சொல்லவில்லை. அதிலே ஒன்றும் பாயிண்ட் ஆப் ஆர்டர் கிடையாது.

திரு. கே. விநாயகம் : இந்த யுனைடெட் நேஷன்ஸ் கிரௌண்டு வாடர் பிராஜெக்ட் அதிகாரிகள் இதைப் பரிசீலிக்கும்பொழுது, தஞ்சாவூரில் இருக்கிற இந்தப் பிரச்னையை, டிரெய்னேஜ் ஆப் எக்ஸெஸ் வாடர், அதாவது அதிகமாக இருக்கிற தண்ணீரை எப்படி வெளியேற்றுவது என்கின்ற பிரச்சனையைப் பற்றி ஆராய்ந்தார்களா ? தஞ்சாவூரில் ஒரு பகுதியிலிருக்கிற தண்ணீரை இன்னொரு பகுதிக்கு—பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, போன்ற இடங்களில் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது, இந்தப் பகுதிக்கு குழாய் மூலம் அனுப்பி விவசாயிகள் பயன்படுத்துவதற்கு ஏதாவது திட்டத்தை அந்த நிபுணர்கள் நமக்குச் சொல்லியிருக்கிறார்களா ? அப்படிச் சொல்லியிருந்தால், அதைப்பற்றி நம்முடைய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அப்படி இதை ஆராய வில்லை என்றாலும், நம்முடைய அரசின் கருத்து என்ன ? அதிகமான தண்ணீரை தண்ணீர் இல்லாத இடங்களுக்கு அனுப்பினால், அவர்களுக்கும் நல்லது, இவர்களுக்கும் நல்லது. ஆகவே இப்படிச் செய்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வடிகால் வசதியைப் பற்றிய பிரச்னை நம்முடைய பொதுப் பணித்துறையினர் மூலமாக ஆராயப்பட்டு வருகிறது. யுனைடெட் நேஷன்ஸ் டெவலப்மெண்டு பிராஜெக்ட் மூலமாக அது ஆராயப்படுமா என்பது பற்றிய விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. வடிகால் பிரச்னை நம்முடைய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இந்த அறிக்கையில் சொல்லப் பட்டதைப் பார்த்தால், ஒரு பக்கம் பி. டபிள்யூ. டி. வேலை செய்து கொண்டிருக்கிறது, இன்னொரு பக்கம் அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்டு வேலை செய்துகொண்டிருக்கிறது. ஒரு இணைப்பான திட்டம் சர்க்காரிடத்திலே இல்லாமல் இருக்கிறது. இரண்டு இலாகாக்களின் மேற்பார்வையில் கிரௌண்டு வாடர் ஸ்கீம் செயல்படுத்தப்படுகிறது, சரியாகச் செயல்படவில்லை என்று பரவலான குறை இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? இரண்டும் இணைந்து செயல்படக்கூடிய நிலைமையில் ஏதாவது திட்டம் இருந்து கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விவசாய இலாகா பொதுப் பணித் துறை இலாகா, யுனைடெட் நேஷன்ஸ் பிராஜக்ட்ஸ் கமிட்டி ஆகியவை கோவார்டினேஷன் அடிப்படையில்தான் இந்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.